டிடி.160 திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,
No.9. கிழக்கு கோவிந்தாபுரம், திண்டுக்கல் - 624 001.
Phone No:0451- 2431516 ::::: Email : aavindigl@gmail.com

ந.க.எண்: 2925/விற்பனை/2021 நாள்: 10.05.2022.

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

டிடி 160 திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., திண்டுக்கல் - 624 001, அவர்களால் 2022-2024 ஆண்டிற்கு (உத்தேசமாக 01.06.2022 முதல் 31.05.2024 வரை) (அதாவது ஆணை வழங்கப்படும் நாளிலிருந்து இரண்டு வருடம்) திண்டுக்கல் - நத்தம் மற்றும் திண்டுக்கல் - வேடசந்தூர் வழித்தடத்தில் உள்ள பகுதிகளில் பால் மற்றும் உபபொருட்கள் விற்பனை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் பால் விநியோகம்/விற்பனை செய்வதற்கு மொத்த முகவர்களுக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒவ்வொரு தடத்திற்கும் தனித்தனியாக வரவேற்கப்படுகின்றன.

| | |
|---|---|
| ஒப்பந்தப்படிவத்தின் விலை | ரூ.250/- வரிகள் உட்பட |
| ஒப்பந்தப்படிவம் வழங்கும் நாள் | 10.05.2022 முதல் 26.05.2022 வரை காலை 10.00 மணி மாலை 4.00 மணி வரை (அலுவலக வேலை நாட்களில்) |
| மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கான கடைசி நாள் மற்றும் நேரம் | 27-05-2022 முற்பகல் 11.15 மணி வரை |
| பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 27-05-2022 முற்பகல் 11.45 மணியளவில் |

மேலும் விவரங்கள் வேண்டுவோர் திண்டுக்கல ஆவின் தலைமை அலுவலகத்தை தொடர்புகொள்ளவும். மேற்படி டெண்டர் படிவத்தை தமிழக அரசின் www.tenders.tn.gov.in இணைய தளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பொது மேலாளர்.

பொது நிபந்தனைகள்:-

1. மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி உறையின் மீது சம்பந்தப்பட்ட வழித்தடத்தின் பெயரை குறிப்பிட்டு சமர்ப்பிக்க வேண்டும்.
2. முன்வைப்புத்தொகை ரூ. 30,000/- (EMD), The General Manager, Dindigul District Cooperative Milk Producers' Union Ltd., Dindigul என்ற பெயருக்கு வங்கி கேட்பு வரைவோலை (Demand Draft) (திண்டுக்கல்லில் மாற்றத்தக்க வகையில்) (Payable at Dindigul) எடுத்து அனுப்ப வேண்டும். கூடுதல் விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்துகொள்ளலாம். (தொலைபேசி எண்: 7845959109). டெண்டர் படிவங்கள் திறக்கப்படும் நாட்கள் விடுமுறையாய் இருப்பின் அடுத்த வேலை நாளில் திறக்கப்படும்.
3. மேற்கூறிய ஒப்பந்தப்புள்ளி படிவத்தை www.tenders.tn.gov.in இணையதளம் மூலமாகவும் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இந்த ஒப்பந்தப்புள்ளி படிவத்தை பதிவிறக்கம் செய்யும் பொழுது எந்த ஒரு காரணத்தினாலும் இடையூறு ஏற்பட்டாலும் திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் பொறுப்பேற்காது. மேலும் அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கும் அலுவலகத்திலிருக்கும் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கும் (மாஸ்டர் காப்பி) ஏதாவது வேறுபாடு காணப்பட்டால் அலுவலகத்திலுள்ள ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கு ஒப்பந்ததாரர்கள் சம்மதிக்கவேண்டும். இது சம்பந்தமாக எந்தவித கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
4. மொத்த பால், உபபொருள்கள் விற்பனை முகவர் ஒப்பந்தங்களில் கலந்துகொள்ளும் ஒப்பந்ததாரர்கள், தங்களது பெயரில் வாகனம் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தம் கோரும் வழித்தட பகுதி முழுவதும் தம்பொறுப்பில் ஆவின் பால் விற்பனையை மேம்படுத்தும் வீதமாக, ஆவின் பால் விற்பனையில் முன் அனுபவம் பெற்று இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. மூன்று நாட்களுக்கான பால் விற்பனை மற்றும் உபபொருள் விற்பனை கிரையத்தொகையை காப்புத்தொகையாக, ஆணை பெற்ற 15 நாட்களுக்குள் இவ்வொன்றியத்தில் உடன் செலுத்தவேண்டும்.
7. ஒப்பந்தம் கோரும் நபருக்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்படும். அல்லது ஒப்பந்ததாரர் கையொப்பமிட்டு சான்று செய்யப்பட்ட ஒப்பந்ததாரரின் பிரதிநிதி ஒருவர் மட்டும் அவரின் சார்பாக கலந்து கொள்ள முன் அனுமதி பெற வேண்டும்.
8. Bank Guarantee 5 Lakhs (Mandatory) ஒப்பந்தகாலத்திற்கு கட்டாயம் சமர்பிக்கவேண்டும்.
9. ஒப்பந்த நிபந்தனைகளை ஒப்புக்கொண்டதற்கான நிபந்தனைகள் அடங்கியிருக்கும் ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்திட்டு கொடுக்க வேண்டும்.
10. ஒப்பந்தப்புள்ளியை எந்தவிதமான காரணமுமின்றி ஏற்கவோ, நிராகரிக்கவோ ஒன்றியத்தின் பொது மேலாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

பொது மேலாளர்.

# உத்தேச வழித்தட அட்டவணை

1. திண்டுக்கல்-வேடசந்தூர்-திண்டுக்கல்

பால் விற்பனை வழித்தட மொத்த முகவர்கள் நியமனம் - ஒப்பந்தப்புள்ளி கோரும் விபரம்.

(உத்தேசமாக 01.06.2022 முதல் 31.05.2024 வரை)
(அதாவது ஆணை வழங்கப்படும் நாளிலிருந்து இரண்டு வருடம்)

பின்வரும் வழித்தட பகுதிகளுக்கு பால் திண்டுக்கல் பண்ணையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

**திண்டுக்கல்-வேடசந்தூர்-திண்டுக்கல்:-**

| எண் | பகுதி | விற்பனை அளவு (லிட்டர்) |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் வளாகம், சென்னமநாயக்கன்பட்டி, சரளப்பட்டி பகுதிகள் | |
| 2 | அரசு போக்குவரத்துகழக தலைமை அலுவலகம், EB காலனி, செட்டிநாயக்கன்பட்டி பகுதிகள் | |
| 3 | நந்தவனப்பட்டி, NS நகர், GTN, RVS காலேஜ், குளத்தூர் பகுதிகள் | |
| 4 | தாடிக்கொம்பு பகுதிகள் | |
| 5 | அகரம் பகுதிகள் | |
| 6 | விட்டல் நாயக்கன்பட்டி | |
| 7 | நாகம்பட்டி | |
| 8 | வேடசந்தூர் | |
| 9 | எரியோடு | |
| 10 | வடமதுரை | |
| 11 | தாமரைப்பாடி | |
| 12 | முள்ளிப்பாடி | |
| 13 | சீலப்பாடி | |
| | **தற்போது விற்பனையாகும் பால் அளவு** | **1600 லிட்டர்** |

பொது மேலாளர்.

| TENDER DOCUMENT |
|---|
| NAME OF THE ROUTE : |

| | |
|---|---|
| EARNEST MONEY DEPOSIT | Rs. 30,000/- (Rupees Thirty Thousand only) |
| COST OF TENDER DOCUMENT | Rs.250/- (Including Tax) |
| SALE OF TENDER DOCUMENT AND PLACE OF SALES | 10.05.2022 to 26.05.2022.<br>FROM 10.00 A.M. TO 4.00 P.M.<br>(DURING OFFICE WORKING DAYS)<br>DINDIGUL DISTRICT COOPERATIVE MILK PRODUCERS' UNION LTD.,<br>9. EAST GOVINDAPURAM,<br>DINDIGUL-624 001 |
| LAST DATE , TIME & PLACE OF RECEIPT OF TENDER | 27.05.2022 upto 11.15 A.M.<br>DINDIGUL DISTRICT COOPERATIVE MILK PRODUCERS' UNION LTD.,<br>9. EAST GOVINDAPURAM,<br>DINDIGUL-624 001 |
| DATE & TIME OF OPENING OF TENDER<br>(1) TECHNICAL BID<br>(2) COMMERCIAL BID | <br><br>27.05.2022 at 11.45 A.M.<br>27.05.2022 at 3.00 P.M. (Tentatively) |
| PERIOD OF CONTRACT | TENTATIVELY FROM<br>01.06.2022 to 31.05.2024 |
| PLACE OF OPENING | DINDIGUL DISTRICT COOPERATIVE MILK PRODUCERS' UNION LTD.,<br>9. EAST GOVINDAPURAM,<br>DINDIGUL-624 001. |

# TECHNICAL BID

MILK MARKETING WHOLE SALE DEALER

VEHICLE DETAILS

**2022-2024**

(அதாவது ஆணை வழங்கப்படும் நாளிலிருந்து இரண்டு வருடம்)

| | | |
|---|---|---|
| 1 | NAME OF THE TENDERER | |
| 2 | REQUIRED CAPACITY OF THE VEHICLE | |
| 3 | TENDER DATE | |
| II. | | |
| 1 | NAME OF THE R.C. BOOK HOLDER | |
| 2 | VEHICLE NO. | |
| 3 | MAKE | |
| 4 | TYPE OF BODY | |
| 5 | YEAR OF MANUFACTURE | |
| 6 | CAPACITY OF THE VEHICLE | LADDEN WEIGHT : Kgs<br>UNLADDEN WEIGHT : Kgs<br>NET WEIGHT : Kgs. |
| 7 | PERMIT VALID UPTO | |
| 8 | INSURANCE VALID UPTO | |
| 9 | F.C.VALID UPTO | |
| 10 | REMARKS IF ANY | |

Encl.:-

XEROX COPY OF R.C. BOOK, F.C., INSURANCE, PERMIT, ETC.,

SIGNATURE OF THE TENDERER.

DINDIGUL DIST.CO-OP. MILK PRODUCER'S UNION LTD
No: 9, East Govindapuram, Dindigul – 624 001.
Phone : 0451-2431516 ::: Email : *aavindglmkg@gmail.com*

# COMMERCIAL BID

பால் விற்பனை மொத்த முகவர் வழித்தட பகுதிக்கு வாகனம் இயக்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி

(உத்தேசமாக 01.06.2022 முதல் 31.05.2024 வரை)
(அதாவது ஆணை வழங்கப்படும் நாளிலிருந்து இரண்டு வருடம்)

| எண். | பால்விற்பனை வழித்தடம் | பால் வழித்தட வாகன போக்குவரத்து கட்டணம் லிட்டர் ஒன்றுக்கு ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாயில்) | மொத்த முகவர் சேவைக்கட்டணம் லிட்டர் ஒன்றுக்கு ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | தடம் - | | |

மொத்தம் ரூ. ______/- (ரூபாய் ______________________________).

SIGNATURE OF THE TENDERER

# திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட் திண்டுக்கல்

## பால் மற்றும் உபபொருள் விற்பனை மற்றும் விநியோக வழித்தட பகுதி ஒப்பந்தம் 2022-2024 பால் மற்றும் உபபொருள்கள் மொத்த முகவருக்கான (ஒப்பந்ததாரர்) ஒப்பந்த விதிமுறைகள்

1. உத்தேசமாக **01.06.2022 முதல் 31.05.2024** வரை (அதாவது ஆணை வழங்கப்படும் நாளிலிருந்து இரண்டு வருடம்) ஒப்பந்ததாரர் ஆணையில் வழங்கப்பட்ட பால் விற்பனை மற்றும் விநியோக வழித்தட பகுதியில் வாகனம் இயக்கவேண்டும். இந்த ஒப்பந்த காலம் முழுவதும் ஒப்பந்தம் கோரியுள்ள வழித்தட பகுதியின் ஆவின் பால் மற்றும் உபபொருள்கள் விற்பனைக்கு முகவரே பொறுப்பாவார். மேற்குறிப்பிட்ட காலத்தில் மொத்த விற்பனை ஒப்பந்த முகவர் தம்பொறுப்பில் விற்பனை மேற்கொண்டு, விற்பனையை அதிகரிப்பு செய்யப்பட வேண்டும். ஒன்றிய விற்பனை மையங்களில் விற்பனை செய்யும் சிறுமுகவருக்கு மற்றும் சில்லறை விற்பனையாளருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்கட்டணம் லிட்டர் ஒன்றுக்கு ரூ.1.60 தனியாக ஒன்றியத்திலிருந்து வழங்கப்படும். அதனை மொத்த முகவர் விற்பனையாளருக்கு எந்த கழிவு இல்லாமல் வழங்கிட வேண்டும்.

2. ஒப்பந்தம் பெற்ற மூன்று மாதங்களுக்குள் தற்போது விற்பனையாகும் பால் அளவில் இருந்து 10% பால் விற்பனை அதிகரிப்பு செய்யப்பட வேண்டும்.

3. இந்த ஒப்பந்த காலம் முடிவுற்று அடுத்த ஒப்பந்தத்திற்கு ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்து ஆணை வழங்கும் காலம் வரையிலோ அல்லது இந்த ஒப்பந்த காலம் முடிவுற்று மூன்று மாதங்களோ இந்த இரண்டில் எது முந்தியதோ அந்த காலம் வரை ஒப்பந்தம் மேற்கொண்டு வாகனம் இயக்க வேண்டும்.

4. இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட வண்டியை வேறு எந்த ஒப்பந்தத்திலும் குறிப்பிடக்கூடாது. ஒரு ஆர்.சி. புத்தகம் வைத்து ஒரே ஒரு பால் விநியோக வழித்தடத்திற்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரவேண்டும். ஒரு ஆர்.சி. புத்தகத்தை வைத்து ஒன்றுக்கும் மேற்பட்ட பால் விநியோக வழித்தடங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரினால், அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளிலிருந்தும் நீக்கப்படுவர். ஒப்பந்ததாரர் ஒப்பந்த வண்டி பழுது பட்டாலோ அல்லது எப்.சிக்கு அனுப்பியிருந்தாலோ மாற்று வண்டி ஓட்டுவதற்கு ஒன்றியத்தின் அனுமதி பெறவேண்டும். அவ்வாறு மாற்று வண்டி ஓட்டும் போது ஏற்படும் இழப்புகளுக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார். அனுமதி பெற தவறும் பட்சத்தில் அபராதம் விதிக்கவோ அல்லது ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யவோ பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

5. ஒப்பந்த புள்ளியில் குறிப்பிட்ட வண்டிக்குப்பதிலாக அனுமதி பெறாமல் மாற்று வண்டியை ஓட்டுவது தெரிய வந்தால் போக்குவரத்து கட்டண பட்டியலில் 5% போக்குவரத்து கட்டண தொகை பிடித்தம் செய்யப்படும்.

6. பால் விற்பனை/ விநியோகம் செய்யும் வண்டி, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பால் வழித்தட அட்டவனை விபரப்படி விற்பனை அளவிற்கு ஏற்றவாறு கொள்ளளவு கொண்ட வாகனம் சூரிய வெப்பம் தாக்காமல் (Puffed) குளிர்ந்ததட்பவெப்பம் வெளியில் செல்லாதவாறு அமைக்கப்பட்ட வாகனமாக இருத்தல் வேண்டும். (Puffed) குளிர்ந்ததட்பவெப்பம் வெளியில் செல்லாதவாறு முறையான அமைப்புடன் வாகனம் இருக்க வேண்டும். இவ்வாகனத்தின் R.C புத்தகம், இன்சூரன்ஸ் மற்றும் பர்மிட் ஆகிய ஆவண நகல்கள் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். மேலும் ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் நாளில் அசல் ஆவணங்கள் நேரில் காண்பிக்கப்பட வேண்டும்.

7. ஒப்பந்தக்தாரருக்கு வழங்கப்பட்ட ஆணையின்படி பால் விற்பனை வழித்தடத்திலுள்ள ஒன்றிய மற்றும் தனியார் விற்பனை மையங்களை நீக்கவோ, சேர்க்கவோ அல்லது மாற்றி அமைக்கவோ, பொது மேலாளருக்கு முழு உரிமை உண்டு.

8. கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் பாலை விற்பனை மையங்களுக்கு கொண்டு சென்று விநியோகம் செய்ய வேண்டும். வண்டி பால் விற்பனை மையங்களுக்கு வந்து சேராமல், காலதாமதமாக வந்து அதனால் பால் கெட்டுப்போகுமாயின் அந்த பாலுக்குரிய தொகையினை பாலின் விலைப்படி ஒப்பந்ததாரரின் போக்குவரத்து கட்டண பட்டியலில் பிடித்தம் செய்து சம்பந்தப்பட்ட முகவர் / விற்பனையாளருக்கு வழங்கப்படும். கெட்டுப்போன பால் திரும்ப வழங்கப்பட மாட்டாது. பால் பைகள் குறைவாக விநியோகித்தால் அந்த பாலின் முழுத்தொகை பிடித்தம் செய்யப்படும். பால் விநியோகம் செய்யத் தவறினால் பாலின் மதிப்புத் தொகையின் இரண்டு மடங்கு வசூல் செய்யப்படும்.

..2..

9. ஒப்பந்ததாரர் ஒப்பந்த காலத்தில் எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்த வண்டியை நிறுத்திக் கொண்டாலோ அல்லது பால் விநியோகம் செய்ய மறுத்தாலோ இவரின் வைப்புத்தொகை மற்றும் கொடுக்கப்பட வேண்டிய போக்குவரத்து கட்டண தொகைகள் யாவும் பறிமுதல் செய்வதோடு எவ்வித முன் அறிவிப்பும் இன்றி ஒப்பந்தமும் ரத்து செய்யப்படும். மேலும் பால் விற்பனை மற்றும் விநியோக வழித்தடத்தில் மாற்று ஏற்பாடு செய்வதால் ஏற்படும் எல்லா இழப்புகளுக்கும் ஒப்பந்ததாரரே பொறுப்பாவார். மேலும் சட்ட ரீதியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

10. குளிரூட்டும் நிலையங்களிலிருந்து பால் டப்புகள் மற்றும் காலி டப்புகள் வண்டியில் ஏற்றவும், இறக்கவும் தனது சொந்த செலவில் ஒப்பந்ததாரர் நபர்களை நியமித்துக் கொள்ளவேண்டும். பால் டப்புகள் மற்றும் காலி டப்புகள் போன்றவற்றை மிகவும் பாதுகாப்பான முறையில் கையாளப்படவேண்டும். கவனக் குறைவினால் பாலுக்கோ, பால் டப்புகளுக்கோ, தடத்திலோ அல்லது ஒப்படைக்கும் இடத்திலோ சேதமோ அல்லது தொலைந்துவிட்டாலோ அதற்கு முழுப்பொறுப்பும் ஒப்பந்ததாரரையே சேரும். பால் எடுத்துச்செல்லும் டப்புகளை மீண்டும் கொண்டு வந்து கொடுத்து அதில் பால் பாக்கெட்டுகளை ஏற்றி சென்றிட வேண்டும். பால் விற்பனை அதிகரிக்கும் தருவாயில் புதிய டப்புகள் கேட்பு செய்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

11. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட வண்டியில் பக்கவாட்டில் மற்றும் முகப்பில் ஆவின் பால் வண்டி என்றும் திண்டுக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய ஒப்பந்த வண்டி என்றும் எழுதி இருக்க வேண்டும். பால்விற்பனை வழித்தடங்களில் பால்வண்டியின் இருபுறமும் ஆவின் பால் திண்டுக்கல் என விளம்பரம் செய்யப்படவேண்டும். தவறும் பட்சத்தில் நாள் ஒன்றுக்கு ரூ.25/- வீதம் வண்டி போக்குவரத்து கட்டண பில்லில் பிடித்தம் செய்யப்படும். ஒப்பந்தம் பெற்று விற்பனை வண்டியை இயக்கும் முதல் 30 தினங்களுக்கு மட்டும் விதிவிலக்கு உண்டு. அதற்கு பின்வரும் நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.25/- வீதம் வண்டி போக்குவரத்து கட்டண பில்லில், ஆவின் பால், திண்டுக்கல் என எழுதிடும் வரை தொடர்ந்து பிடித்தம் செய்யப்படும்.

12. விநியோகம் செய்யப்படும் பாலில் அளவு, டப்புகளின் எண்ணிக்கை, நேரம் முதலிவற்றை சம்பந்தப்பட்ட வண்டியின் விநியோக பட்டியல்படி விநியோகிக்க வேண்டும்.

13. ஒப்பந்தப்புள்ளி ஆணை வழங்கிய காலத்திற்கு அல்லது அடுத்த ஒப்பந்த ஆணை வழங்கப்படும் வரையிலோ ஒப்பந்தப்புள்ளி விதிகளுக்கு புறம்பாக நடந்துகொண்டால் காப்புத்தொகை பறிமுதல் செய்யப்படும்.

14. விற்பனை பகுதிகளில் விற்பனை மையங்களுக்கான பாலை கொண்டு சென்று விநியோகிக்க தவறினால் அப்பகுதியின் முகவர்கள்/ பணியாளர்கள் தனது பொறுப்பில் எடுத்து வந்து சேர்க்கும் தருவாயில் அவர்கள் செலவழிக்கும் அனைத்து போக்குவரத்து செலவு தொகையையும் ஒப்பந்ததாரர் போக்குவரத்து கட்டணத்தில் பிடித்தம் செய்து அவர்களுக்கு வழங்கப்படும். மேலும் அபராதமாக ரூ.1000/- வசூல் செய்யப்படும்.

15. ஒன்றியம் அனுப்பி வைக்கும் இதர அனைத்துப் பொருட்களையும் ஒப்பந்ததாரர் தன்னுடைய சொந்த பொறுப்பில் பத்திரமாக எடுத்துச் சென்று ஒப்படைக்கவேண்டும்.

16. ஒரே ஒப்பந்ததாரர் ஒன்றுக்கும் மேற்பட்ட தடங்களில் வண்டியை ஓட்டுவதற்கு ஒப்பந்ததாரராக இருந்தால் பால்வழித்தடத்திலோ அல்லது பால் விநியோக வழித்தடத்திலோ வண்டி ஓட்டும் காலத்தில் எந்த தடத்திலாவது இழப்புகள் ஏற்படுமாயின் அந்த தடத்தில் முழுத்தொகை பிடித்தம் செய்ய இயலாத நிலையில் மற்றைய தடங்களில் போக்குவரத்து கட்டண மற்றும் காப்புத் தொகைகளிருந்து வசூல் செய்ய பொதுமேலாளருக்கு முழு உரிமை உண்டு.

17. திருவிழாக்கள், வேலை நிறுத்தம் பந்த், கலகம், வெள்ளம், அரசியல் கட்சிகள் நடத்தும் பேரணி மற்றும் பொதுக் கூட்டங்கள் போன்றவைகளால் போக்குவரத்து தடைப்பட்டாலும், இயற்கை சீற்றம் அல்லது பெரும் காற்றினால் மரங்கள் விழுந்து சாலை போக்குவரத்து தடைபட்டாலும், பால் விநியோகத்திற்கு மாற்று வழிகளை கடைப்பிடித்து தம்முடைய சொந்தப்பொறுப்பில் பால் விநியோகம் செய்து வரவேண்டும். இது ஒப்பந்ததாரரின் கடமையாகும். மேற்கூறிய தடைகளினால் பால் கெட்டுப்போனால் ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.

18. பால் விநியோகம் செய்யும் பொழுது வழியில் ஏதாவது தவறுகள் நேர்ந்து கண்டுபிடிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்டால் ஒப்பந்த காலத்தில் ஏற்படும் இழப்பிற்கு ஒப்பந்ததாரரே முழுப்பொறுப்பாவார். இந்த நட்டத் தொகையை ஒப்பந்ததாரரின் போக்குவரத்து கட்டணப்பட்டியலில் பிடித்தம் செய்து சம்பந்தப்பட்டவர்க்கு வழங்கப்படும். மேலும் இவ்வாறான தவறுகளுக்கு ஒன்றியம் நிர்ணயிக்கும் அபராத தொகையை செலுத்திட வேண்டும் மற்றும் ஒப்பந்தம் ரத்து செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

19. ஒன்றியம் சார்ந்த பொருட்கள் தவிர பிற நபர்கள் மற்றும் பிற பொருட்களை வண்டியில் எக்காரணத்ததைக் கொண்டும் ஏற்றக்கூடாது. தவறினாலோ இது பற்றி தெரியவந்தவுடன் அன்றைய தினம் போக்குவரத்து கட்டணம் வழங்கப்படமாட்டாது. மேலும் இதற்காக அபராதமும் விதிக்கப்படுவதோடு, ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் பொது மேலாளருக்கு அதிகாரம் உண்டு.

20. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தம் ஏதாவது காரணங்களினால் ரத்து செய்யப்பட்டால் இதற்கு நஷ்ட ஈடோ அல்லது ஈட்டுத்தொகையோ எதுவும் வழங்கப்பட மாட்டாது.

21. ஒப்பந்த ஆணை வழங்கப்பட்டதும் நிர்ணயித்துள்ள காப்புத்தொகையை இந்த ஒன்றியத்தில் செலுத்த வேண்டும். இந்தத் தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்பட மாட்டாது.

22. காப்புத்தொகை ஒப்பந்த காலம் முடிந்து ஒப்பந்தக்காலத்திற்கான சட்டப்பூர்வ தணிக்கை முடிந்த பின்னர் திருப்பி வழங்கப்படும்.

23. ஒப்பந்த காலத்தில் வண்டி ஓட்டியதற்கான போக்குவரத்து கட்டண பட்டியல் 15 நாட்களுக்கு ஒருமுறை இவ்வொன்றியத்தில் கேட்பு செய்ய வேண்டும். போக்குவரத்து கட்டண பட்டியல் அலுவலகத்தில் பெறப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் போக்குவரத்து கட்டணத் தொகை வழங்கப்படும். காலதாமதம் ஏற்படின் தாமத்திற்கான நஷ்ட ஈடு கிடையாது.

24. போக்குவரத்து கட்டண தொகை காசோலை மூலம் அல்லது RTGS முறையில் வழங்கப்படும். ரொக்கமாக வழங்கப்பட மாட்டாது.

25. சட்ட ரீதியான நடவடிக்கைகள் திண்டுக்கல் நகர எல்லைக்குட்பட்டது.

26. ஒன்றிய ஊழியர்களோ, நிர்வாகக் குழு உறுப்பினரோ அல்லது அவர்களது நெருங்கிய உறவினர்களோ ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்க முடியாது. இவர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி படிவம் பூர்த்தி செய்யப்பட்டு இவ்வலுவலகத்தில் பெறப்பட்டால் அது நிராகரிக்கப்படும்.

27. ஒப்பந்ததாரர் அரசுக்கு செலுத்த வேண்டிய வருமான வரி மற்றும் இதர வரிகள் ஏதும் இருப்பின் அது போக்குவரத்து கட்டண தொகையிலிருந்து பிடித்தம் செய்து இருசால் செய்யப்படும்.

28. பால் விற்பனை மற்றும் விநியோக வழித்தட பகுதிகளில் பிரச்சனைகள் இருக்கின்ற போது போக்குவரத்து கட்டண தொகை வழங்கப்படமாட்டாது. பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்ட பிறகே போக்குவரத்து கட்டண தொகை விடுவிக்க அனுமதி வழங்கப்படும்.

29. ஒப்பந்தப்புள்ளி கோரி விண்ணப்பித்தவர்கள் முறையாக ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளைப் பின்பற்றி பூர்த்தி செய்யாமல் இருந்தால் தகுதி நீக்கம் செய்யப்படும்.

30. ஒப்பந்தகாலத்தில் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்படி வண்டி ஓட்டாத காலத்தில் ஒன்றியம் தனது பொறுப்பில் மாற்று வண்டி ஏற்பாடு செய்து பால் விநியோகம் செய்கின்ற போது அதனால் ஏற்படக்கூடிய கூடுதல் போக்குவரத்து கட்டண வித்தியாசத்தொகை மற்றும் பால் கெடுதல் போன்ற இதர இழப்புகளுக்கான தொகையினை ஒப்பந்ததாரரின் போக்குவரத்து கட்டண மற்றும் காப்புத்தொகையில் பிடித்தம் செய்யப்படும். அதற்குண்டான கூடுதல் செலவை சட்ட ரீதியாக வசூலிக்க ஒன்றியத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

31. ஒப்பந்த காலத்தில் தனியார் பால் மற்றும் பால் உபபொருட்களை சம்பந்தப்பட்ட ஒப்பந்த பகுதிகளில் விற்பனை செய்வது தெரிய வரும் போது அவருடைய ஒப்பந்தம் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படுவதுடன் காப்புத்தொகையும் பறிமுதல் செய்யப்படும். மேலும் தனியார் பால் மற்றும் உபபொருட்கள் எக்காரணம் கொண்டும் ஒன்றிய ஒப்பந்த வண்டியில் ஏற்றிச்செல்லவோ, விற்பனை செய்யவோ கூடாது.

32. இவ்வொன்றியத்தில் ஒப்பந்த ஆணைப்படி வண்டி ஓட்டும் ஒப்பந்ததாரர் ஒப்பந்த காலத்தில் தனியார் பால் பண்ணையை ஆதரிக்கவோ அல்லது வளர்ச்சியில் ஊக்குவிக்கும் காரியங்களில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டால் அவரது ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதுடன் காப்புத்தொகையும் பறிமுதல் செய்யப்படும்.

33. ஒப்பந்த நிபந்தனைகளை ஒப்புக்கொண்டதற்கான நிபந்தனைகள் அடங்கியிருக்கும் ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்திட்டு ஒப்பந்தம் கொடுக்கும்போது இணைத்து சமர்ப்பிக்கவேண்டும்.

34. சுங்கச் சாவடிகளில் வசூலிக்கப்படும் அனைத்து சுங்க வரிக்கும் மற்றும் ஒப்பந்த தடத்தில் மற்ற இடங்களில் வசூலிக்கப்படும் அனைத்து வகை கட்டணங்களுக்கும் ஒப்பந்ததாரர் பொறுப்பாவார்.

35. ஒப்பந்ததாரர் தனது வண்டியில் பணிபுரியும் சிப்பந்திகள் மோட்டார் வாகனச் சட்டப்படி தகுதி பெற்றவர்களாக பார்த்துக்கொள்ள வேண்டும். பால்வழித்தடத்தில் ஏற்படும் எந்தவித விபத்திற்கும் ஒன்றியம் பொறுப்பேற்காது. அவ்வாறு ஏற்படும் எந்தவித நஷ்டத்திற்கும் ஒப்பந்ததாரரே முழுப் பொறுப்பாவார்.

36. ஒப்பந்ததாரர் தனது வண்டியை ஒப்பந்த காலம் முழமைக்கும் இன்சூரன்ஸ் செய்திருக்க வேண்டும். சாலைவரி, பெர்மிட், வருடாந்திர தகுதி சான்று (FC) அனைத்தும் முறையாக பராமரிக்கபட வேண்டும். அதனால் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் ஒப்பந்ததாரரே முழு பொறுப்பாவார்.

37. வண்டி பழுதுபட்டதால் பால் கெட்டுப்போனாலும், கொட்டிப் போனாலும் அதற்கு ஒப்பந்ததாரரே முழப்பொறுப்பாவார்.

38. ஒப்பந்ததாரர் ஒப்பந்த காலத்திற்கு தனது சொத்து பற்றிய "சொத்து மதிப்பு சான்றிதழ்" (Solvency Certificate) ரூ.2,00,000/-க்கு குறையாமல் இவ்வொன்றியத்தில் சமர்ப்பிக்கவேண்டும். இச்சான்றிதழ் முறையாக அரசு வருவாய்த்துறை அலுவலகத்தில் பெற்று இணைக்கப்பட வேண்டும்.

39. ஒப்பந்ததாரர் தனது வண்டியின் பொருட்டு அரசிற்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் "மோட்டார் வாகன வரி" ஆகியவற்றை தவறாமல் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் ஏற்படும் எந்தவித இழப்புக்கும் ஒப்பந்ததாரரே முழப்பொறுப்பாவார்.

40. எந்தப் பிரச்சனைக்கும் ஒன்றியம் எடுக்கும் முடிவே இறுதியானது. ஒன்றியம் அவ்வப்போது கொடுக்கும் நிபந்தனைகளுக்கு ஒப்பந்ததாரர் கட்டுப்படவேண்டும். மேலும் விற்பனைக்கு நிர்ணயிக்கும் குறியீட்டினை குறிப்பிட்ட காலத்தில் எய்திட வேண்டும்.

41. சம்பந்தப்பட்ட அலுவலரிடமிருந்து " பாக்கி எதுவுமில்லை " என்ற சான்றிதழ் பெற்ற பிறகே கடைசி போக்குவரத்து கட்டண பட்டியலுக்கு பணம் வழங்கப்படும் மற்றும் இதர தொகைகள் திரும்ப வழங்கப்படும்.

42. ஒப்பந்தகாலத்தில் ஒப்பந்ததாரர் இறந்துவிட்டால் அவரது சட்டப்பூர்வ வாரிசுதாரர் வண்டி ஓட்ட அனுமதிக்கப்படுவார். அதற்கான உரிய சான்றுகள் முறையாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

43. தூர அளவுகள் அதிகரிக்கும் போது ஆய்வு மற்றும் பரிசீலனைக்குப் பின் பொதுமேலாளரின் ஒப்புதலுக்குப்பின்னரே அதற்கான போக்குவரத்து கட்டண வழங்கப்படும்.

**44.** ஒப்பந்ததாரர் பால் வண்டி சம்பந்தமான டிரிப் சீட்டுகளையோ அல்லது அதற்கு சம்பந்தமான ஆதாரங்களையோ வைத்திருக்க வேண்டியது அவரது முழுப்பொறுப்பாகும். இது சம்பந்தமாக ஒன்றியத்திற்கு எவ்வித பொறுப்பும் இல்லை.

**45.** ஒப்பந்தம் ஏற்கப்பட்டவுடன் ஒப்பந்ததாரர் ரூ.100/- மதிப்புக்குக் குறையாமல் முத்திரைத்தாளில் ஒன்றியத்துடன் ஒப்பந்த விதிகளை ஏற்று இருநபர் சாட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொடுக்கவேண்டும்.

**46.** ஒப்பந்த வண்டியில் பால் டப்புகள் ஏற்றும் பகுதி துாய்மையாக வைத்திருக்கவேண்டும். தவறும் பட்சத்தில் அபராதம் விதிக்கப்படும்.

**47.** தேர்வு பெற்ற ஒப்பந்ததாரர் ஒன்றிய விதிகளின்படி **ரூ.21/-** (ரூபாய் இருபத்தி ஒன்று மட்டும்) செலுத்தி ஒன்றியத்தில் அசோசியேட் உறுப்பினராகச் சேர வேண்டும். ஆனால் அவர்களுக்கு எந்தவிதமான ஓட்டுரிமையோ அல்லது நிர்வாகத்தில் கலந்துகொள்ளவோ அல்லது லாப, ஈவில் பங்கு பெறவோ உரிமை இல்லை.

**48.** இந்த ஒப்பந்தம் தொடர்பாக ஏதாவது பிரச்சினை இருந்தால் இது தொடர்பாக அசோசியேட் என்கின்ற முறையில் திண்டுக்கல் துணைப்பதிவாளர் (பால்வளம்/வழக்குகள்) நீதிமன்றத்தில் மட்டுமே முறையீடு செய்து கொள்ளலாம்.

**49.** தேர்வு பெற்ற ஒப்பந்ததாரர்கள் தங்களுடைய மாதிரி கையொப்பத்தினை அதற்கான படிவத்தில் ஒன்றிய ஒப்பந்தப்புள்ளி குழு அலுவலர்கள் முன்னிலையில் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

**50.** நிர்வாகம் விரும்பினால் 30 நாட்கள் அவகாசம் கொடுத்து பால் விற்பனை வழித்தடத்தினை முழுமையாக நிறுத்திக்கொள்ள நிர்வாகத்திற்கு முழு உரிமை உண்டு.

**51.** சம்பந்தப்பட்ட பால் விற்பனை மற்றும் விநியோக வழித்தட பகுதியில் பால் விநியோகம் செய்தவுடன் டப்புகளை பண்ணையில் ஒப்படைக்க வேண்டும். ஒன்றியம் வழங்கும் பால் பை நிரப்பிய டப்பாக்களை சம்பந்தப்பட்ட பால் விற்பனை சிறுமுகவர்களிடம் பாதுகாப்புடன் சேர்க்கவேண்டும். விற்பனைக்குண்டான பால் மற்றும் பால் டப்பாக்களுக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார். காலி டப்பாக்களை அன்றைய தினமே பண்ணையில் ஒப்படைக்க வேண்டியது ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும்.

**52.** முன்வைப்பத்தொகை ரூ.30000/- (EMD)யை ஏதாவது ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வங்கிவரைவோலை எடுக்கப்பட்டு (திண்டுக்கல்லில் மாற்றக்கூடியதாக) (DD-Payable at Dindigul) தொழில்நுட்பபுள்ளியுடன் இணைத்து சமர்பிக்கப்படவேண்டும். முன்வைப்புத்தொகை இல்லாத விலைப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

**53.** தகுதியான ஒப்பந்ததாரர் பால் மற்றும் பால்உபபொருட்கள் விற்பனை மற்றும் விநியோகம் செய்வதற்கான முறையான உணவுப்பாதுகாப்பு மற்றும் மருந்தியல் துறையின் உரிய சான்றிதழ், ஒப்பந்தம் பெற்ற ஒரு வார காலத்திற்குள் பெற்று சமர்பிக்கவேண்டும். தவறினால் ஒப்பந்தத்தை ரத்து செய்ய பொதுமேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

**54.** பால் விற்பனை அதிகரிக்கும் பட்சத்தில் பால் விநியோக வழித்தட வாகனத்தின் கொள்ளளவு திறனை தேவைக்கேற்ப அதிகரிக்க அல்லது மாற்று வாகனத்தை அமைத்திட பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

**55.** பால் விற்பனை மையங்களுக்கு அனுப்பப்படும் பால் பாக்கெட்டுகளை முகவர்கள்/ விற்பனையாளர்களிடம் ஒப்பந்ததாரர் சரியான அளவுகளில் ஒப்படைக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பாலை அலுவலகத்திற்கு திரும்ப கொண்டு வரக்கூடாது. விநியோகத்திற்கு வழங்கப்பட்ட பால் எக்காரணம் கொண்டும் திரும்ப பெறப்படமாட்டாது.

56. ஏனைய அரசு மற்றும் ஒன்றியம் அவ்வப்பொழுது அறிவிக்கும் ஆணை மற்றும் அறிவுரைகளை தவறாது பின்பற்றி செயல்பட வேண்டும்.

57. ஒப்பந்தம் கோரி விண்ணப்பம் செய்பவர்கள் வருமானவரி பிடித்தம் செய்து செலுத்துவதற்குரிய அவர்களுடைய PAN NUMBER நகல் மற்றும் தங்களது கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு தாக்கல் செய்த வருமான வரி சான்றினை இணைக்க வேண்டும்.

58. மொத்த முகவர்களுக்கிடையில் தாவா ஏற்படின், பொது மேலாளர் மற்றும் துணைப்பதிவாளர் (பால்வளம்), திண்டுக்கல் அவர்களின் எழுத்துப்பூர்வ இசைவின்றி மேல் நடவடிக்கை / நீதிமன்றத்தை அணுக கூடாது.

59. பண்ணையிலிருந்து விற்பனைக்கு எடுக்கும் பால் (காலை மற்றும் மாலை) இரு நேரங்களில் ஒப்பந்த வாகனம் குறிப்பிட்ட நேரத்தில் காலதாமதமின்றி பாலை எடுத்துச்செல்ல வேண்டும். தவறும் பட்சத்தில், பால் விற்பனை வழித்தடத்தில் கடைசி வாகனமாக ஏற்றப்படும்.

60. பால் விற்பனை செய்யப்படாத பகுதிகளை முகவர் கண்டறிந்து பால் விற்பனை மேற்கொள்ள வேண்டும். தேவைப்படின் ஒன்றியமே நேரடியாக பால் விற்பனை மேற்கொள்ள பகுதிகளில் பால் விற்பனை மேற்கொள்ளும். இதனை ஒப்பந்ததாரர் ஆட்சேபிக்க உரிமை கிடையாது.

61. பால் விற்பனைக்காக எடுத்துச்செல்லும் டப்புகளை மீண்டும் கொண்டு வந்து ஒப்படைத்து அதில் மறு விற்பனைக்கான பால் எடுத்துச்செல்லப்பட வேண்டும். டப்புகள் மீண்டும் கொண்டு வராவிடில் அல்லது குறைத்து கொண்டு வந்தால், டப்புகளுக்கான பணம் காப்புத்தொகையில் பிடித்தம் செய்யப்பட்டு புதிய டப்புகள் வாங்கி பால் விநியோகத்திற்கு வழங்கப்படும்.

62. பால் விற்பனை இலக்கு எய்தாவிடில் ஒப்பந்தத்தை முன்னறிவிப்பின்றி ரத்து செய்து புதிய முகவர் நியமிக்க பொது மேலாளர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

63. செயல்முறை ஆணையில் கண்ட அனைத்து சரத்துகளும் நிபந்தனைகளும் நடைமுறையில் பொருந்தும்.

64. காப்புத்தொகை ஒவ்வொரு வழித்தடத்திற்கும், விற்பனை அளவிற்கு ஏற்றவாறு நிர்ணயம் செய்யும் மூன்று நாட்களுக்குரிய கிரையத்தொகையை ஆணை பெற்ற உடன் செலுத்திட வேண்டும். மேலும் விற்பனை அளவு அதிகரிக்கும் போது அதற்குரிய கூடுதல் காப்புத்தொகை அறிவுரையின்படி செலுத்திட வேண்டும்.

65. தினசரி தேவைக்கு எடுக்கப்படும் பாலுக்குரிய கிரையத்தை முதல் நாள் ஒன்றிய வங்கி கணக்கில் செலுத்தப்பட வேண்டும். ரொக்கமாக ஒன்றியத்தில் செலுத்தககூடாது. மற்றும் வங்கி விடுமுறை நாட்களில் பாலுக்கான கிரையத்தொகையை சேர்த்து முதல் நாளே வங்கியில் செலுத்தப்பட வேண்டும்

66. அனைத்து ஆவணங்களும் தொழல் நுட்ப படிவத்தில் கட்டாயம் இணைக்கப்பட வேண்டும்.

67. டீசல் விலை உயர்வு செய்யப்படும் பொழுது போக்குவரத்துக்கட்டணம் உயர்த்தி வழங்கப்பட மாட்டாது.

68. ஆணை பெற்ற மொத்த முகவர் பகுதியின் ஒப்பந்ததாரர், தத்தமது பகுதிக்குரிய பால் விற்பனை மைய அலுவலக முகவரியை சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் விற்பனையாகும் பகுதிகள்/நிறுவனங்களின் பால் அளவு ஆகிய விபரங்கள் 15 தினங்களுக்கு ஒருமுறை கட்டாயம் ஒன்றிய அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

69. இந்த ஒப்பந்தப்புள்ளியில் விண்ணப்பித்தவர்கள் இவ்வொன்றியத்தில் ஏற்கனவே மொத்த முகவராக செயல்பட்டிருந்தால் நாளது தேதியில் நிலுவை இல்லா சான்று மேலாளர் (பண்ணை) மற்றும் மேலாளர் (விற்பனை) அவர்களிடம் பெற்று படிவத்துடன் கட்டாயம் இணைக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் அனைத்தையும் ஏற்று புத்தி சுவாதீனத்துடனும், சுயநினைவுடனும் ஒப்புதல் அளிக்கிறேன்.